ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கொல்லிமலை, போதமலை மக்களின் பேச்சுவழக்குச் சொற்கள்: உருவாக்கச்சூழல்

கு.நந்தகுமார்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

முனைவர் இரா.பிரபாகர்
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

ஆய்வுச்சுருக்கம்

உலகில் மனிதன் தோன்றி வாழத் தொடங்கியப் பின்னர் தன்னுடைய கருத்தைச் சைகைகளின் மூலம் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினான். தனக்கென எவ்வித மொழியும் தெரியாத அவன் உணவுக்காகவும் காட்டு விலங்குகளின் இறைச்சியைப் பச்சையாக உண்ணத் தொடங்கி, பின்பு நெருப்பை கண்டுபிடித்து சுட்டு உட்கொண்டான். இயற்கைச் சீற்றங்களுக்கும் காட்டு விலங்குகளுக்கும் பயந்த ஆதிமனிதன் கூட்டமாக வாழத் தொடங்கினான், பின் உணவைத் தேடி இடம்பெயர்ந்து சென்றான். வேட்டைக்குச் சமூக நிலையிலிருந்த மனிதன் உற்பத்தி சமூகமாக நிலையாக ஓரிடத்தில் வாழ்ந்தான். அவ்வாறு வாழ்ந்த நில அமைப்பானது மலை, காடு, வயல், கடல் என நால்வகைப்பட்டன. நில அமைப்புக்கேற்ப வாழ்க்கை முறை மாறியது. இதனால் மொழியிலும் மாற்றம் தோன்றியது. மலையும் அதுசார்ந்த பகுதி குறிஞ்சி. இந்நில மக்களின் மொழி சமவெளி மக்களின் மொழியிலிருந்து மாறுபட்டது. மெல்லின ஓசைகளை மிகுதியாகப் பயன்படுத்தினர். அவ்வகையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை போதமலையில் வாழ்ந்து வரும் மலையாளி இன மக்களின் பேச்சு வழக்குச் சொற்கள் சமவெளிப்பகுதி மக்களிடமிருந்து எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதே ஆய்வுக் கருவாக அமைகிறது.

## ஆய்வு நெறிமுறை

களஆய்வின் மூலம் சேகரித்தத் தரவுகளைத் தொகுத்துக் கூறுவதால் தொகுப்பாய்வு அணுகுமுறையாலும், அவற்றை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையாலும் ஆய்வு நெறிமுறைப் பின்பற்றப்பட்டுள்ளது.

## முன்னுரை

ஆதிகால மனிதன் சைகையால் தனது கருத்தைப் பிறருக்குத் தெரிவித்தான். பின்னர் மொழி உருவாயிற்று. மொழி பேச்சு, எழுத்து என இருவடிவம் பெற்றது. இனக்குழுக்களாக வாழத்தொடங்கிய மனிதர்களிடம் ஓர் இனக்குழுவிற்கும் மற்றோர் இனக்குழுவிற்கும் இடையே மொழியில் வேறுபாடுகள் தோன்றின. இவ்வேறுபாடுகளே ஒரு நாட்டின் எல்லைக்குள்ளும் மாநிலத்துக்கு மாநிலம், வட்டாரத்திற்கு வட்டாரம் ஊருக்கு ஊர். சாதிக்குச் சாதி மனிதனுக்கு மனிதன் வேறுபாடு இருக்கக் காண்கிறோம்.

இயற்கை அமைப்புகளுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறை அமைகிறது. வாழ்க்கைச் சார்ந்து அவர்களின் பேச்சும் மொழியும் காணப்படுகிறது. மொழி மட்டுமின்றி மக்கள் தங்களின் வாழ்க்கை அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள், மேற்கொள்ளும் தொழில்கள் பழக்கவழக்கங்கள் ஆகியவை இயற்கை அமைப்பை ஒட்டியே அமைகின்றன. இதனால்

தனிநபரின் மொழியில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. சமவெளி பகுதியில் வாழும் மக்கள் பேசும் மொழிக்கும், மலைப்பகுதியில் வாழும் மக்கள் பேசும் மொழிக்கும், இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. அவர்கள் வாழும் இடத்திற்கு ஏற்றாற் போல் மொழி மாறுகின்றன. எனவே மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இடப்பின்னணியை ஆய்வது ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

மொழி

மொழி என்பது மக்களால் பயன்படுத்தப்படும் அரியவகை கலையாகும். இம்மொழியே மக்களின் அறிவை வளர்ப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் உறுதுணையாகத் திகழ்கிறது என்பர். மனம் பெரும்பாலும் மொழியால் வளர்ச்சிப் பெறுகிறது. மக்கள் மொழியை வளர்ப்பது, அவற்றால் வளர்வது ஆகிய அடிப்படையில் வாழ்கின்றனர். “பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய், ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. அவர்கள் பேசும் மொழியே உண்மையான அறிகுறி எனலாம்”[1] என்று மு.வ. அவர்கள் மொழிப் பற்றி குறிப்பிடுவதால் அறிய முடிகிறது.

மக்களும் மொழியும்

ஐவகை நிலங்களில் முதன்மைப் பெறும் நிலமாகக் குறிஞ்சி நிலம் திகழ்கின்றது. நாமக்கல் மாவட்டத்தில் கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் கொல்லிமலையும் அதனையொட்டி வடக்குத்திசையில் போதமலையும் அமைந்துள்ளன. இங்கு மலையாளியின மக்கள் பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். சமவெளிப்பகுதியில் வாழும் மக்களின் பேச்சுமொழிக்கும் மலைவாழ் மக்களின் பேச்சு மொழிக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையும், அவர்களின் பண்பாடு, கலாச்சாரம், மற்ற மக்களைக் காட்டிலும் வேறுபட்டுள்ளன. மக்கள் கையாளுகின்ற மொழி அவர்களின் வாழ்வனுபவத்தைச் சார்ந்தது. தனது வாழ்வின் வளர்ச்சிக்கு ஏற்ப மொழியும் வளர்ச்சிப் பெறுகிறது. மொழி தனித்து இயங்கக்கூடியது அல்ல. அது பயன்படுத்துவோரின் பயன்பாட்டுப் பொருளுக்கு ஏற்பவும் இடச் சூழலுக்கு ஏற்பவும் மாற்றம் பெறுகின்றது. “மொழி குறிப்பிட்ட இனக்குழுவின் வாழ்க்கை முறைச் சார்ந்து நிலம் சார்ந்து, கலைகள் தொழில்கள் கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகள் சார்ந்து உருவாவது இந்த மொத்தக் கூறுகளும் சேர்ந்ததுதான் மொழி. இவற்றில் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்க முடியாது”[2] என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

வாழ்க்கைச்சூழல்

“கிராம வளர்ச்சியின் மேம்பாடு தான் நாட்டு வளர்ச்சி அடங்கியுள்ளது”[3] என்ற காந்தியின் கூற்றுக்கு ஏற்ப கிராமங்கள் கட்டமைப்பு நகர வளர்ச்சிக்கு உகந்தாக இருக்கும். ஆனால் இக்கிராமங்களில் காலங்காலமாக வாழும் பழங்குடி மக்களுக்கு அடிப்படை வசதிகள் இன்றுவரை கிடைக்கவில்லை. அடிப்படை வசதிகள் கூட நிறைவு பெறாத மக்கள் தங்களுடைய வாழ்க்கை அர்த்தம் கிடைக்கப் பெறவில்லை என்கின்றனர். இதைப் பற்றி நகர மக்கள் கூறும்போது “இந்த நாகரீகக் காலத்தில் ஒரு ரோடு வசதி, மருத்துவ வசதிக்கூட இல்லாம இங்கெல்லாம் எப்டி வாழ்றாகளோ”[4] என்று சமவெளி பகுதி மக்கள் போதமலைக்கு வரும்போது கூறுவதைச் சுட்டிக்காட்டுகின்றனர். மலைகளுக்குச் செல்லும் வழித்தடங்கள் ஒத்தையடிப்பாதையாகவும், அச்சம் தரும் வகையிலும் 7 கி.மீ தூரம் வனப்பகுதியிலும் நடந்து செல்ல வேண்டியுள்ளது. இவர்கள் வாழும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாத பொருள்கள் உட்பட அனைத்தையும் தலையில் தூக்கிதான் செல்ல வேண்டும். “என்னபன்றது தலையெழுத்து அப்படினு”[5] மலைவாழ் மக்கள் தற்பொழுது கூறுகின்றனர்

உணவு, உடை, இருப்பிடம், சுகாதார வசதி, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இன்றியமையாதது. ஆனால் போதமலை பழங்குடி மக்கள் இதில் தன்னிறைவு அடைந்து விட்டனரா? என்றால் இல்லை. ஒரு பெண் தன்னுடைய பிரசவ வலியை விட அதற்கு வைத்தியம் பார்க்கச் செல்லும் தொலைவை நினைத்துப் பார்க்கும் போது ஏற்படும் வலி தான் அதிகம்.

பிரசவ காலத்தில் தன் மனைவியை மலையிலிருந்து தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குச் செல்வதற்குள் அவள் இறந்துவிட்டாள். இதனால் மனம் நொந்து “மலையில ஒரு ஆஸ்பத்திரி இந்துந்தா எம்பொண்டாட்டிய நா சாவ உற்றுப்பனா, எம்புள்ளைகளும் தாயத்து

*நிக்குமா"[6] என்று கெடமலையைச் சேர்ந்த ஆண்டி மிக வருத்ததுடன் கூறினார். இதைப்போன்றே தன் இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு மூன்றாவது பிரசவத்தில் இறந்துப்போன உண்ணாமலையின் கணவன் குப்பன் கூறுகையில், "இந்த ஊர்ல ஒரு ஆஸ்பத்ரி இந்துந்தா எம்பொண்டாட்டி யா சாவறா, எம்புள்ளைகளும் இப்டி தாயில்லாம சிரமபடுது"[7] என்று கூறுகிறார். போதமலையில் மருத்துவவசதி இல்லாத காரணத்தால் தன் தாயையும், தந்தையையும் இழந்து வறுமையில் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை நூற்றிற்கும் அதிகமானதாகும். தாயின் அரவணைப்பில்லாமலும், தந்தையின் அன்பு கிடைக்காமலும் வாழ்ந்து வருகின்றனர். மனைவி இறந்ததால் கணவருக்கு மறு திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இவர்களிடம் இன்றளவும் உள்ளது. "எங்கம்மா சாவாம இந்துச்சான நானு எதுக்கு இத்தன சிரம படரைன்"[8] என்று தன் தாயை இழந்து பரிதவிக்கும் குப்பமக்கா கூறுகிறாள். இவளைப் போன்று பல குழந்தைகள் இம்மலைக் கிராமங்களில் உள்ளனர்.*

*போதமலையில் ஆரம்பப் பள்ளி மட்டும் உள்ளதால் தன் குழந்தைகளை விட்டு பிரிய மனமின்றி, பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுகின்றனர். விவசாயத்தைக் கவனித்துக் கொள்ள தன்னுடனே வைத்துக்கொள்கின்றனர். அவன் வளர்ந்தபிறகு "என்ன நீ படிக்க வச்சிந்தியான நா யா இத்தன சிரமத்துக்கு ஆளவப் போறன்"[9] என்று தன் தாய் தந்தையிடம் மகன், மகள்கள் கேட்கும் நிலை இன்றைக்கும் போதமலை மக்களிடையே காண முடிகிறது.*

*வீடும் அதன் பின்னணியும்:-*

*போதமலையில் விவசாய நிலங்களில் கூரைகளால் ஆன வீடுகள் பல இருக்கின்றன. இவ்வீடுகளை 'கெணாங்கு' புல்லைக் கொண்டு வேய்ந்துள்ளனர். இதை "ஊட்டுக்கு கெணாங்கு மேஞ்சி பத்து வருச்சம் இக்கும் இன்னைக்கி வரியம் எந்த காத்தாவது மலையாவது ஒன்னும் அசைக்கக் கூட முடியில"[10] என்று தன் வீட்டைப் பார்த்து கெடமலையில் சுண்டக்காட்டைச் சேர்ந்த குப்பன் என்பவர் கூறும்போது, அமக்களின் வீட்டின் அமைப்பு தெரியவருகிறது.*

*இதேபோல் கொல்லிமலை மக்கள் கூரைவீட்டின் மேற்பகுதியான அட்டாலியை 'மச்சி' என்று அழைக்கிறார்கள். இது பற்றி மலைவாழ் மக்கள் ஒருவர் பேச்சு வழக்கில் கூறும் போது,"அந்த மச்சில ஏரி பானையில இக்கற சனிகாய கொஞ்சம் அள்ளு"[11] என்று தந்தை தன் மகனிடம் கூறினார். இதிலிருந்து அட்டாலி என்பதற்கு 'மச்சி' என்ற சொல்லை பயன்படுத்துகின்றன.*

*வீட்டின் பின்புறத்தில் மாடுகள் கட்டப்படும் இடத்தினைச் சமவெளிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தாழ்வாரம் என்றழைக்கின்றனர். இச்சொல்லைப் போதமலை மக்கள் 'எரவாணம்' என்றழைக்கின்றனர். இதை மேலூரைச் சேர்ந்த அண்ணாமலை என்பவர் தன் மகனிடம் "எரவாணத்துள இக்ற மாட்டப் பூடுச்சினுப் போயி அந்த அணப்ல கட்டு"[12] என்கிறார். வாரம் தாழ்வாகக்கட்டப்பட்டதால் சமவெளி மக்கள் தாழ்வாரம் என்கின்றனர். இதுபோலவே மலைவாழ் மக்களும் இறக்கிவிட்டு (தாழ்வாக) வேய்ப்படுவதால் இறவாரம் என்பதைப் பேச்சு வழக்கில் எரவாணம் என்கின்றனர்.*

*கொல்லிமலை மக்கள் சிறுதானியங்களைக் கொட்டிஜ பதப்படுத்துவதற்கும், பக்குவப்படுத்துவதற்கும் மூங்கிலால் ஆன உயரமான வட்டவடிவில் பெரிய கூரையைப் பயன்படுத்துகிறார்கள். அவற்றை 'தொம்பை' என்ற பெயரில் அழைக்கின்றனர். தொங்கும் பை போன்ற அமைப்புடையதால் தொம்பை என்று பெயர் வந்திருக்கலாம். இதை "தொம்பையில இக்ற சாமைய ஒரு வல்லம் ஆவராட்டம் ஆள்ளு, சாம குத்துணும்"[13] என்று இம்மக்களின் பேச்சுமொழியில் கூறுகின்றனர். பன்னெடுங்காலமாய், விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த விளைப்பொருள்களைச் சேமித்தும் பதப்படுத்தி வைப்பதற்கும் தங்களின் வீட்டிலேயே பெரியதாழி போன்ற குழி ஒன்றை வெட்டியுள்ளனர். அதனைப் பதப்படுத்தி சாணம் பூசி வைக்கப்பட்டு அதனுள் விளைப் பொருள்களை கொட்டி வைக்கும் முறை கொல்லிமலை மக்களிடையே முன்னோர்கள் காலத்தில் இருந்ததாகச் செம்மேட்டைச் சேர்ந்த சடையம்மாள் கூறும்போது, "சேறுக்குழியில சாமைய கொட்டி வச்சிட்டா பத்து வருச்சம் ஆனாலும் கெடாம இக்கும்"[14] என்று கூறினார். அவர்களைப் போல் போதமலை மக்கள் தானியம் கொட்டி வைக்கும் இடத்தை 'சேறுக்குழி' என்ற பெயரில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.*

*வீட்டின் வாசற்கதவைத் திறந்தவுடன் அதற்கு நேர எதிரேவுள்ள சுவரில் விளக்கு வைப்பதற்கு முக்கோண வடிவில் குழிகள் அமைக்கப்பட்டிருக்கும். அதை மாடக்குழி என்ற*

பெயரில் அழைக்கிறார்கள். இதை மேலூரைச் சேரந்த காத்தாயி என்ற பாட்டிக் கூறும் போது,"மாடக்குலில இக்கற வெளக்குல எண்ணெய ஊத்தி வெளக்க பொருத்துங்கா, வெறுவூடா இக்க கூடாது"[15] என்று கூறினார். வீட்டிற்கு 'மாடம்' என்றோர் பெயருமுண்டு. மாடத்தில் உருவாக்கப்படும் குழிக்கு 'மாடக்குழி' என்று பெயரிட்டுள்ளனர்.

தொழிலும் அதன் பின்னணியும்:-

இம்மக்கள் ஆற்றுநீர்ப் பாசன நிலங்கள் இன்றி மானாவரி நிலங்களையும் வைத்துள்ளனர். அந்நிலத்தில் பயிர் செய்வதை இதை போதமலை மக்கள் "மேட்டுவெள்ளாம" என்ற சொல்லால் அழைக்கின்றனர். இந்நிலம் நீர்ப் பாய்ச்சுவதற்கு வழியற்று மேடான பகுதியைக் கொண்டிருப்பதால் அங்கு செய்யப்படும் வெள்ளாமை 'மேட்டுவெள்ளாமை' எனப் பெயர் பெறுகிறது. போதமலை மக்களுக்கு விவசாயம் வானம் பார்த்த பூமியாகும். சித்திரை மாதம் வெயிலுக்கு மழைப்பொழிந்தால் தான் உழவுத்தொழிலை மேற்கொள்வார்கள். இதை போதமலை மக்கள் "சித்தரையில மழப்பொஞ்சாதான நாம காட்ட ஓட்டி போட முடியும்"[16] என்பது அனைவரின் எதிர்ப்பார்பாக அமைந்துள்ளது.

உழவு ஓட்டுவதற்கு இதற்கு முன் இருந்த கலப்பைத் தேய்ந்துவிட்டதால், புதிதாக ஒரு கலப்பைத் தேவைப்படுகிறது. இதை போதமலை மக்கள் பேச்சு வழக்கில் கூறும் போது, "பழய கலப்ப நல்ல தேஞ்சிப்போச்சி, புதுசா ஒரு கலப்ப சேத்துனும் அதுக்கு ஒரு வலிச்சக்கட்டைய வெட்டி போட்டாதான் கட்ட நல்லகாயும்"[17] என்று கெடமலையைச் சேர்ந்த பழனி தன் தம்பியிடம் கூறினார்.

வைகாசி மாதத்தில் உழவுஓட்டியப் பிறகு முதற்பட்டமாகச், சாமை, கம்பு, ஆரியம், போன்ற சிறுதானியங்களை விதைக்கின்றனர். போதமலை மக்கள் இதற்கு "போனவருச்சம் தான் ஆரியம் வெதச்சைன், இந்த வருச்சம் சாமதான் வெதைக்கனும் சாம வெதச்சா சோத்துக்கும் ஆயிறும், மாட்டுக்குப் பில்லுக்குப் பில்லுமாயிரும்"[18] என்று கொல்லிமலை சோளக்காட்டைச் சேர்ந்த நாதன் கூறினார்.

விதை விதைத்தப் பின்பு, ஒரு மாதங்களில் தானியப்பயிர்கள், கலையெடுக்கும் அளவிற்கு வளர்ந்து விடும். கலைகளை அகற்றுவதற்கு இம்மக்கள் கூறும்போது "காட்ல உண்டுனா கல மொளச்சி கெடக்குது, கல புடுங்கத்திக்கி ஆளவரச்சொல்லிவுடுங்கா"[19] என்று குழிவளவை சேர்ந்த மேலக்காட்டுக் குப்புசாமியிடம் அவர் மனைவி காத்தாயி கூறினாள். இதில் நிறைய என்னும் பெயரடை 'உண்டுனா'வாகப் பயன்படுத்தப்படுவதைக் காண முடிகிறது. பயிர்கள் விளைந்து கதிர்கள் முற்றியிருக்கும் தருவாயில் அதனை பாதுகாக்க இரவுக்காவல் இருக்க வேண்டும். குறிப்பாக நாய்களைக் கட்டபடாமல் அவிழ்த்துவிட பட்டிருக்கும், காட்டுப்பன்றி போன்ற விலங்குகளை வராமல் தடுக்க தீ மூட்டப்பட்ட நிலையில் இருக்கும். இதை போதமலை மக்கள் கூறும்போது, "ராத்திரி நேரத்துல நாய அவுத்துவுடுங்கா, அப்பறம் காட்டுப்பன்னி வந்தாலும் வரும், கணப்பு (நெருப்பு) போடுங்கா"[20] என்று கெடமலையைச் சேர்ந்த குப்பன் தன் மகன் அண்ணாமலையிடம் கூறினார். இங்கு நெருப்பு என்பது கணப்பாகப் பயன்படுகிறது. நெருப்பானது 'கண கண' என இருப்பதால் கணப்பாகிறது.

சிறுதானியங்கள் நன்கு விளைந்தப்பின்பு அவற்றை அறுவடைச் செய்வதற்கு வரும் கூலியாட்களுக்குப் பணத்திற்கு பதிலாகத் தானியங்களே அவர்களின் உழைப்பிற்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. இதைப் போதமலை மக்கள் "கேவுரு வெளஞ்சிறுச்சி அறுக்கத்திக்கி வாங்கா, கூலி ரண்டு வள்ளம் வாங்கிக்கலாம்"[21] என்று கொல்லிமலை செம்மேட்டைச் சேர்ந்த அண்ணாமலை அருகில் உள்ள நாச்சாயிடம் கூறினார். ஒரு வள்ளம் என்பது நான்கு படி அளவு கொண்டது.

உணவு

மக்களின் மொழி அவர்கள் வாழும் இடச்சூழலுக்கு ஏற்ப மாறுபடுவது போல அவர்களின் உணவு முறைகளும் இயற்கை அமைப்புக்கு ஏற்ப மாறுபடும். போதமலையில் விளையும் தானியங்களுக்கு ஏற்ப அவர்களின் உணவு முறைகள் அமைந்துள்ளன.

முன்னோர்கள் காலத்தில் அதிகளவில் சாமை, கம்பு, கேழ்வரகு, சோளம் போன்றவற்றை மலைவாழ்மக்கள் உணவாகப் பயன்படுத்தினர். விழா நாட்களில் மட்டும் நெல்லுச்சோறு ஆக்குவது. இதை "வர பொங்கலுக்காவது நெல்லுச்சோறு ஆக்கனும், போன மாரியாநோம்பிக்கி ஆக்கனது"[22] என்று கூறினார்கள். அதனால் தற்போதைய நிலைமாறி கம்பஞ்சோறும், கழியும்

உணவாகக் கிடைக்காதா என்று எதிர்பார்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதை, “களிக்கு மொச்சக்கொட்ட சாறும், கம்பஞ்சோத்துக்கும் கருவாட்டு கொழம்பும் வைச்சி திண்ணா எவ்வளவு அருமையா இக்கும் தெரியுமா’[23] என்று நரியங்காடு அம்மனிப்பாட்டி கூறினார். குழம்பைச் ‘சாறு’ என்றும் பெயருண்டு ‘சாறு’ என்பது அதிக நீர் சேர்க்கப்பட்ட குழம்பு. ‘குழம்பு’ என்று சொல்லப்படுவது கொஞ்சம் கெட்டியாக இருப்பது. அதனால்தான் மொச்சக்கொட்டையைச் சாறாகவும், மீனைக் குழம்பாகவும் வைக்கின்றனர். நெல்லரசிக்கும், களிக்கும் கீரைவகைகளைக் குழம்பாகப் பயன்படுத்துகின்றனர்.

போதமலை மக்கள் கீரை வகைகளை ‘நக்கிரி’ என்று அழைக்கின்றனர். இதை, “சாமச்சோத்துக்கும் புளச்சநக்கிரிக்கும் அவ்வளவு மாதிரியா’ (சுவையா) இக்கும்’[24] என்றும் கூறுகின்றனர். அறுவடைச் செய்த தானியங்களை முதலில் பெருமாளுக்கு மாவிடித்து உதிரிமாவாக அன்னதானம் கொடுப்பார்கள் இதை ‘சிறப்பு’ கொடுக்கறது மற்றும் ‘அமுது’ கொடுத்தல் என்றும் கூறுகின்றர். போதமலை மக்கள் வீட்டில் வளர்க்கப்படும், கோழி, ஆடு, பன்றி போன்றவற்றையும் மற்றும் வேட்டையாடியும், இறைச்சியைத் தங்களின் உணவாகப் பயன்படுத்துகின்றனர். இதை, “வெடியாலக்கி பன்னி போடறாங்களாம் (இறைச்சிக்காகப் பழியிடுதல்) உக்கு எத்தன கெழா வேணும்’[25] என்று கெடமலை அண்ணாமலை சுண்டக்காட்டுச் சரவணனிடம் கேட்டார். போதமலையில் ஆண்கள் குளிரினைக் காரணமாகக் மையமாகக் கொண்டு, மது அருந்தும் பழக்கத்திற்கு நூற்றுக்கு முப்பது சதவிதம் ஆளாகின்றனர். அவர்களில் திருமணமானவர்கள் அதிகளவில் குடிப்பதால் அதில் சிலர் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகளவில் மதுஅருந்தியதால் குண்டி வெடித்து இறந்தவர்களும் உள்ளனர். இதை கெடமலையைச் சேர்ந்த பெருமாயி தனது மகன் பழனியிடம் கூறும்போது, “உங்கப்பைன் சாராயத்த குடிச்சிபுட்டு குண்டிவெடிச்சி செத்துட்டான், நா உங்க ஆறு பேத்தையும் வளத்தி வாருவம் பன்னங்காட்டியும், எத்தன கயட்டப்பட்டைனு உக்கு தெரியுமாடா’[26] என்று கூறி கண்ணீர்ச் சிந்தும்போது நம் மனமும் கலங்குகிறது. இங்கு ஆளாக்குதல் என்பதற்கு ‘வாருவம்’ என்கின்றனர். வாருவம் என்பது முழுமையான உருவம் என்னும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

### இடப்பின்னணியும் மொழியும்

மொழி என்பது கருத்தைப் பரிமாறிக் கொள்வதற்கான ஓர் ஊடகம். ஓர் இனக்குழுவின் வாழ்வியல் அம்சம். இயற்கை அமைப்புடன் ஒட்டிய வாழ்க்கைமுறை மொழியை உருவாக்குகிறது. இக்கருத்தை இமையம் “ஒரு வாழ்க்கை முறைதான் மொழியை உருவாக்குகிறது. மொழி ஒரு போதும் ஒரு வாழ்க்கை முறையை உருவாக்குவதில்லை’[27] என்கிறார். எனவே வாழ்க்கை முறையுடன் ஒட்டிய மொழி இச்சூழலுக்கு ஏற்பத் தோன்றுகிறது.

எனவே மேற்சொல்லப்பட்ட கருத்துகளின் வாயிலாக அவ்வவ் இடச்சூழலுக்கு ஏற்ப மொழி தோன்றி வளர்ச்சி பெற்று வழங்கி வருகிறது என்பது வெளிப்படுகிறது.

### முடிவுரை

அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறாத பழங்குடியின மலைவாழ் மக்களில் போதமலை மக்களும் ஒருவராக இருப்பதை அறிய முடிகிறது. மலைவாழ் மக்கள் கூட்டமாக வாழ்வதில்லை. அவர்கள் தங்களுடைய விவசாய நிலங்களிலேயே வீடுகளை அமைத்துக் கொள்கின்றனர். வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்திருக்கின்றனர் என்பது வெளிப்படுகிறது. சாலை வசதியும், மருத்துவ வசதியும் கிடைக்கப் பெறாத கிராமமாகப் போதமலை உள்ளது. இதன் விளைவாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளும் உயிர்சேதத்தை பற்றியும் அறிய முடிகிறது. கொல்லிமலை மக்கள் சிறுதானியங்களை விளைவித்து உணவாகவும் பயன்படுத்தி வருவதை இக்கட்டுரை வழி காணமுடிகிறது. கொல்லிமலை, போதமலை மக்களின் பேச்சு மொழிகள், சமவெளி பகுதி மக்களின் பேச்சு மொழியை விட மாறுபட்டு காணப்படுகின்றது என்பது தெளிவாகிறது. அதற்கு ஏற்ப புதுப்புது சொற்களை உருவாக்கி பயன்படுத்துகின்றார் என்பது தெளிவாகிறது.

அடிக்குறிப்புகள்

1. மு.வ. மொழி வரலாறு, ப.1.
2. இமையன், பிப்ரவரி 2007, வட்டார வழக்கும் எழுத்தாளர்களும், காலச்சுவடு (மாத இதழ்) இதழ் எண்: 86 ப.24
3. மேலது, ப.24
4. நேர்காணல், கந்தசாமி, வயது – 39, புதுப்பட்டி – 22-01-2023
5. நேர்காணல், அரப்புளி, வயது – 36, கெடமலை – 22-01-2023
6. நேர்காணல், குப்பாயி, வயது – 47, கெடமலை – 22-01-2023
7. நேர்காணல், குப்பன், வயது – 40, மேலூர் - 24-01-2023
8. நேர்காணல், மணி, வயது – 23, கெடமலை – 24-01-2023
9. நேர்காணல், தனக்கொடி, வயது – 28, கெடமலை – 24-01-2023
10. நேர்காணல், குப்பன், வயது – 42, கெடமலை - 28-01-2023
11. நேர்காணல், கந்தன், வயது 77, கொல்லிமலை, 14-02-2023
12. நேர்காணல், அண்ணாமலை, வயது – 50, மேலூர் – 30-01-2023
13. நேர்காணல், கந்தன், வயது-77, கொல்லிமலை, 14-02-2023
14. நேர்காணல், சடையம்மாள், வயது-70, கொல்லிமலை, 14-02-2023
15. நேர்காணல், காத்தாயி, வயது-68, கீழூர், 03-02-2023
16. நேர்காணல், ராஜேந்திரன், வயது – 29, கெடமலை – 22-01-2023
17. நேர்காணல், பழனி, வயது – 47, கெடமலை – 05-02-2023
18. நேர்காணல், நாதன், வயது – 50, கொல்லிமலை – 05-02-2023
19. நேர்காணல், குப்புசாமி, வயது – 53, கொல்லிமலை - 30-01-2023
20. நேர்காணல், குப்பன், வயது – 59, கெடமலை – 05-02-2023
21. நேர்காணல், அண்ணாமலை, வயது – 50, கொல்லிமலை- 30-01-2023
22. மேலது.,
23. நேர்காணல், அம்மனி, வயது – 58, விளாரம், 14-02-2023
24. மேலது.,
25. நேர்காணல், அண்ணாமலை, வயது – 30, கெடமலை – 24-02-2023
26. நேர்காணல், பெருமாயி, வயது – 72, கெடமலை – 24-02-2023
27. இமையன், காலச்சுவடு (மாத இதழ்) இதழ் எண்: 86 ப.24

துணை நூற்பட்டியல்


1. மு.வரதராசனார், மொழி வரலாறு, பாரி நிலையம், மண்ணடி, சென்னை
2. இமையம், வட்டார வழக்கும் எழுத்தாளர்களும், காலச்சுவடு, பிப்ரவரி 2007.


********* ********* ********** ********* ********* ********** ********** **********